கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

கார்த்திகை மாத இதழ்
NEWS BULLETIN
NOVEMBER 2024
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

.

நாள்	நிகழ்வு
2002 முதல் 22 ஆண்டு களாக	கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக பாடசாலை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 38-44 Binley Road, Coventry CV3 1JA முகவரியில் நடைபெற்று வருகின்றது
21/12/ 2024	ஒளிவிழா STOKE COVENTRY CLUB மண்டபத்தில் மதியம் 10.30 மணிமுதல் 3.00 மணிவரை.

SATURDAYS	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	1.00pm – 2.00pm
SUNDAYS	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	10.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	10.00am – 2.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	10.00am – 12.00am





கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் ஆண்டு விழா

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மதிப்புக்குரிய திரு கந்தையா அரியரத்தினம் ஐயா அவர்களின் தலைமையில் 09/11/2024 அன்று COMMUNITY RESOURCE CENTRE மண்டபத்தில் மாலை 3 மணிமுதல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக தொழிற் கட்சியினுடைய கொவன்றி தெற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாரா சுல்தானா அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக "வேதாகம வித்தகர்" சிவஸ்ரீ சௌபாக்கிய சசிகுமாரக் குருக்கள் ஆதீனகுரு முதல்வர் கொவன்றீஸ்வரம் அவர்களும் ஸ்ரீமதி கமலேஸ்வரி சசிகுமார குருக்கள் அவர்களும் COUNCILLOR MR JASWANTH SINGH BIRDIE (HIS HIGHNESS FORMER LORD MAYOR OF COVENTRY) அவர்களும், LION RAVINDER PRASAD (SECRETARY OF THE BRITISH ORGANISATION FOR PEOPLE OF ASIAN ORIGIN) அவர்களும் வருகை தந்து விழாவைச் சிறப்பித்திருந்தனர்.







மங்கள விளக்கேற்றல், அகவணக்கம் அனைத்து மாணவர்களினதும் பாடசாலைக் கீதத்தைத் தொடர்ந்து, வரவேற்பு உரையினைக் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மதிப்புக்குரிய திரு கந்தையா அரியரத்தினம் ஐயா அவர்கள் நிகழ்த்தினார். கலைநிகழ்வுகளின் வரிசையில் "நாட்டிய கலாநிபுண" "நுண்கலைமானி" ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் ஆசிரியையின் மாணவர்களின் "தியான சுலோகமும் விநாயகர் துதி" நடன நிகழ்வும், "பழம் நீயப்பா" என்ற பாடலுக்கான நடன நிகழ்வுகளும்,





திருமதி ஆயிஷா உசேன், செல்வி மதுமிதா சிங்கராசா ஆசிரியர்களது நெறியாள்கையில் பாலர் வகுப்பு ஒன்று மாணவர்களின் அகர வரிசைப் பாடல் நிகழ்வும்,



திருமதி வித்யாலட்சுமி பிரபுசங்கர், திருமதி தவமலர் திருநாவுக்கரசு ஆசிரியர்களின் நெறியாள்கையில் பாலர் வகுப்பு இரண்டு



மாணவர்களின் "இயற்கையை நேசிப்போம்" நடன நிகழ்வும்,

"பரதக் கலாவித்தகர்" "நாட்டிய கலாநிபுண" "கலைமானி" ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் ஆசிரியையின் மாணவிகளின் சிவன் நடனமும், "தாய்மொழியைக் குறைவாக நினைக்காதே" நடனமும், "குறத்தி" நடனமும்,







திருமதி கமலினி பகீஸ்வரன் ஆசிரியரின் நெறியாள்கையில் ஞாயிறு தமிழ்ப் பாடம் கற்கும் மாணவர்களின் "பெற்ற தாயை மறவாதே" நிகழ்வும்,



"இசைவாணர்" "கானகலாதர" "சங்கீத கலாநிபுண" திரு தீனதயாளன் பத்மநாதன் ஆசிரியரின் மாணவர்களின் கர்நாடக சங்கீத நிகழ்வுகளும்,





திருமதி சுனித்ரா கேதீஸ்வரராஜா, திருமதி ரஜனி கோபாலகிருஷ்ணன் ஆசிரியர்களின் நெறியாள்கையில் வகுப்பு ஒன்று மாணவர்களின் "கியாங் கியாங் குருவி" அபிநயப் பாடல் நிகழ்வும்



திருமதி சிவாஜினி அமலதாஸ், திருமதி ஜெயரதி வரதராஜா ஆசிரியர்களின் நெறியாள்கையில் வகுப்பு இரண்டு மாணவர்களது "தமிழ் வளர்ச்சியில் பெரியோர்களின் பங்கு" உரை நிகழ்வும்,



"கலாஜோதி" செல்வி வாரணி சரவணதாசன் ஆசிரியையின் மாணவர்களின் வயலின் இசை நிகழ்வும்,



"கலாஜோதி" செல்வி ரிபனி லோறன்ஸ் ஆசிரியையினுடைய மாணவர்களின் சுரத்தட்டு இசைநிகழ்வுகளும்,





"நுண்கலைமானி" ஸ்ரீமதி வானதி சுரேஷ்குமார் ஆசிரியையின் மாணவர்களின் கர்நாடக சங்கீத நிகழ்வுகளும்,





திருமதி இமையாளினி ஜெயதீஸ்வரன், திருமதி பிரதீபா கோகிலநாதன் ஆசிரியர்களின் நெறியாள்கையில் வகுப்பு மூன்று மாணவர்களின் தாளலய நிகழ்வும்,



"கலா ஜோதி" செல்வி வாரணி சரவணதாசன் ஆசிரியையின் மாணவர்களின் வீணை இசை நிகழ்வுகளும்,



திருமதி புஷ்பா தவத்துரை, திருமதி யோகலட்சுமி குணேஸ்வரன் ஆசிரியர்களின் நெறியாள்கையில் வகுப்பு நான்கு மாணவர்களின் "இசையும் கதையும்" நிகழ்வும்,



திருமதி ஜெயாதேவி சிவநேசன், திருமதி ரஜனி யேசுராசா, திருமதி கலைமதி விஜயரட்ணம் ஆகிய ஆசிரியர்களின் நெறியாள்கையில் வகுப்பு ஐந்து மற்றும் ஆறு மாணவர்களுடைய "விவாத மேடை" நிகழ்வும்,



கராத்தே ஆசிரியர் திரு பிரதீத் பீரீஸ் அவர்களின் நெறியாள்கையில் "தற்காப்புக் கலை" நிகழ்வுகளும்,





திருமதி ரஜனி உதயசேகரன், திருமதி பாயிஷா அபுசாலி, திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன் ஆகிய ஆசிரியர்களின் நெறியாள்கையில் வகுப்பு ஏழு, எட்டு சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்களின் "நாம் கண்ட கனவு" நாடக நிகழ்வும் நடைபெற்றன.



கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தில் ஆரம்பம் முதல் நடனத்தைப் பயின்று டிப்ளோமா கற்கைநெறியினை நிறைவு செய்த மாணவிகள் நடன ஆசிரியர்களைக் கௌரவித்தனர்.




இந்த வருடத்துக்கான சிறந்த மாணவர்களுக்கான தெரிவில், தமிழ் பாடத்தில் சிறந்த மாணவனாக செல்வன் திரிசாந்த் கேதீஸ்வரன் அவர்களும், கலைப் பாடத்திலே சிறந்த மாணவியாக செல்வி ஆரதி சியாமளன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு சுழற்சிக் கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.. தமிழ் மற்றும் கலைப் பாடங்கள் இரண்டிலுமே சிறந்த மாணவர்களாக செல்வன் மதீரன் சௌந்தரராஜன், செல்வன் நீரஜன் பகீரதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு ஸ்ரீதர் சுழற்சிக் கோபுரமும், கேடயமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



அன்றைய நிகழ்வுகளுக்கு கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மிருதங்க ஆசிரியர் “வாத்ய சுதாகர” திரு மயில்வாகனம் விஜயராஜா அவர்கள் மிருதங்க இசையை வழங்கியிருந்தார்.



தமிழாசிரியை திருமதி ரஜனி யேசுராசா, மாணவர்கள் செல்வி பவநிலா சிவாகரன், செல்வன் தனுஜன் இரவீந்திரன், செல்வன் ஓவியன் இரட்ணம் மற்றும் திரு பகீரதன் ஸ்ரீநாதன் ஆகியோர் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கியிருந்தார்கள்



நிகழ்வுகளின் இறுதியில் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் திரு பகீரதன் ஸ்ரீநாதன் அவர்களின் நன்றி உரையோடு இனிதே நிறைவு பெற்றது.

ஆண்டு விழாவைச் சிறப்புற நாடாத்துவதற்கு பெற்றோர்கள், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள் நிர்வாக உறுப்பினர்கள் எனப்பலரும் நிதி மற்றும் இணை அனுசரணை வழங்கி இருந்தார்கள். அத்தோடு ஒலியமைப்பு, காணொளி, புகைப்படம், உணவக விற்பனை எனப்பல வழிகளிலும் ஒத்துழைத்திருந்தார்கள்.

பங்கேற்ற வெளிநிகழ்வுகள்

கொவன்றி தமிழ்க் குடும்பம் என்னும் அமைப்பினரால், 10/11/2024 அன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்த தீபாவளிக் கொண்டாட்டத்தில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியைகளில் ஒருவரான “நாட்டிய கலாநிபுண” “நுண்கலைமானி” ஸ்ரீமதி அஜந்தா காண்டீபன் அவர்களின் மாணவிகளான செல்விகளான தருணிக்கா திலீப், லினிஷா மணிகண்டன், மோகித்தா வசந்தகுமார் ஆகியோரும், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியைகளில் ஒருவரான “நாட்டிய கலாநிபுண” “பரதக்கலாவித்தகர்” ‘கலைமானி’ ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகளான செல்விகள் வர்ஷிதா ஜெயசங்கர், மோனிக்கா ஜெய்கணேஷ், தருண்யா பகீரதன் ஆகியோரும் நடன நிகழ்வுகளை வழங்கியிருந்தார்கள்.



WORLD PEACE AND HARMONY என்ற அமைப்பினர் இணையவழியில் நடாத்திய நிகழ்வில் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக சங்கீத ஆசிரியர்களில் ஒருவரான ‘நுண்கலைமானி’ ஸ்ரீமதி வானதி சுரேஷ்குமார் அவர்கள் ஒரு பாடலையும், செல்வி கவிநயா சுரேஸ்தாஸ் பேச்சினையும் வழங்கியிருந்தார்கள்.





மாவீரர் நினைவேந்தல்

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வானது கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்ப் பாடசாலையில் 24/11/24 அன்று மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்றது.



மாவீரர்களுக்கான ஈகைச் சுடர்களை கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் மதிப்புக்குரிய திரு கந்தையா அரியரத்தினம் ஐயா அவர்களும், கொவன்றி வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் மதிப்புக்குரிய வைத்தியர் சதானந்தன் இரட்ணம் அவர்களும், மாவீரரின் சகோதரியும், நிர்வாக அலுவலருமான திருமதி சிவகலா சுரேஸ்தாஸ் அவர்களும் ஏற்றி வைத்ததோடு, உரையுமாற்றியிருந்தனர். மாவீரரின் சகோதரனும், பெற்றோருமான திரு கேதீஸ்வரன் அவர்களும் ஈகைச்சுடரினை ஏற்றியிருந்தார்.



அக வணக்கத்தைத் தொடர்ந்து, மாணவிகள் செல்வி கவிநயா சுரேஸ்தாஸ், செல்வி பவநிலா சிவாகரன் ஆகியோரும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் சிரேஷ்ட உபதலைவரும், தமிழ்ப்பாட ஆசிரியையுமான திருமதி ஜெயஸ்ரீ சதானந்தன் அவர்களும் கவிதையை வழங்கி இருந்தார்கள். நடன ஆசிரியை திருமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்கள் ஒரு பாடலை வழங்கியிருந்தார். அதனைத் தொடர்ந்து, நிகழ்வில் கலந்துகொண்டோர் மாவீரர்களுக்கு மலர் வணக்கம் செலுத்தினார்கள். நினைவேந்தல் நிகழ்வைக் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் திருமதி விஜிதா ரவீந்திரன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.





